123

# போதனை விஷய பூங்கொத்து

மாதமோருமுறை மலரும்.

...OF THE REGISTRAR OF ...
28 APR 1942
MADRAS




*Editor & Publisher:*

... A. LOURDUSWAMI, B.A., L.T.,

...ndary Training School, Trichinopoly.

...ப்பிரல்-மே **1942** மலர் **10, 11**

...முறை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

வருஷ சந்தா ருபாய் 1. தனிப்பிரதி அணா 1¼

JL
ஊ211,N11PD
M42 32-1641
182306

# போதனா விஷய பூங்கொத்து

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பத்திராதிபர் குறிப்புகள் ... ... | 281 |
| 2. | ஆசிரியத்துவமும், அணியியலும் ... ... | 284 |
| 3. | யோசனைக் கணக்கு விடை ... ... ... | 285 |
| 4. | விடுமுறையும் ஓய்வும் ... ... ... | 286 |
| 5. | யோசனைக் கணக்கு ... ... ... | 288 |
| 6. | சுருக்கமான பாடக்குறிப்புகள் ... ... | 289 |
| 7. | எதனால்? ... ... ... ... | 290 |
| 8. | பூகோளம் போதிப்பதெப்படி? ... ... | 291 |
| 9. | விடுகதை விடை ... ... ... | 294 |
| 10. | ரஸ்தா விதி ... ... ... ... | 295 |
| 11. | மாயக்குழந்தை உறைபனியால் ஆனது ... ... | 296 |
| 12. | பெற்றோர் சங்கக் கூட்டங்கள் ... ... | [illegible] |
| 13. | நம் பாடசாலை நிகழ்ச்சிகள் ... ... ... | 299 |
| 14. | பழைய மாணவர் சங்கம் ... ... ... | 300 |
| 15. | பாலர் சங்கீதம் ... ... ... | 303 |


---

## போதனா விஷயப் பூங்கொத்து

### காரியாலயம்

பூங்கொத்து காரியாலயத்திற்கு மணியார்டர் செய்யும் அன்பர்கள் தயவுசெய்து தங்கள் முழு விலாசத்தையும், சந்தா நம்பரையும் தெளிவாகக் கூபனில் எழுதினால் நலமாக இருக்கும்.

பத்திராதிபர்.

---

Imprimatur: ✠ JAMES, *Bishop of Trichinopoly.*



29 APR 1942

# போதனா விஷயப் பூங்கொத்து

கொத்து 32] 15 ஏப்ரல்-மே 1942 [மலர் 10, 11

## பத்திராதிபர் குறிப்புகள்

**பழைய மாணவர்கட்கு நன்றி:**—இவ்வருஷம் நம் பழைய மாணவர்கள் பலர் தம் தாய்ப்பாடசாலையின் மட்டில் தங்களுக்குள்ள அன்புக்கு அறிகுறியாகப் பல வெள்ளிப் பதக்கப் பரிசுகளையும், நன்கொடைகளையும் தகுதியுள்ளவர்களுக்கு அளிப்பதாக வாக்குறுதி கூறியுள்ளார்கள். (விவரத்தை மற்றோரிடத்தில் பழைய மாணவர் ஆண்டுவிழா எனும் தலைப்பினடியிற் காண்க) இவர்களனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தாய்ப்பாடசாலையின் பேரில் இவர்களுக்குள்ள அன்பைப் பெரிதும் போற்றுகின்றோம்.

* * * * *

இச்சந்தர்ப்பத்தில், முந்திய வருடத்திய பூர்வ மாணவர்களில் பலர், நம் பழைய மாணவர் சங்கத்தின் ஆயுள் அங்கத்தினராகவும், நன்கொடையாளர்களாகவும், இன்னும் பலவாறாகவும் வாக்குத்தத்தம் கொடுத்தவர்கள் இதுகாறும் வாளாவிருக்கின்றனர்; இவ்விஷயத்தைச் சற்று வருத்தத்துடன் தெரிவிக்கவேண்டியதாய் இருக்கிறது. ஒருக்கால் ஏதாவது சில அசௌகரியங்க

ளால் அவ்வாறிருக்கின்றனர் போலும். ஆயினும் தாய்ப்பாடசாலையை நம் பூர்வ மாணவர்கள் மறக்கமாட்டார்களென்பது திண்ணம். குறைந்த பட்சமாக, "பூங்கொத்து" வருடசந்தா ரூ. 1 செலுத்தி நீண்டகாலம் நம் பழைய மாணவர் சங்கத்தின் அங்கத்தினராக விளங்கி, பூங்கொத்தின் பயனையும், தாய்ப்பாடசாலையின் ஆசிகளையும் பெற்று நல்வாழ்வு வாழ இறைவன் அருள் புரிவாராக.

* * *

**நமது "பூங்கோத்து":**—நம் "பூங்கொத்தின்" பக்கங்கள் முதலில் 16-ம் பின்னர் 24 பக்கங்களாகவும், அப்பால் இதுகாறும் 32 பக்கங்களைக்கொண்டும் துலங்கி வெளிப்போந்து வந்துள்ளது. ஆனால் யுத்த நெருக்கடியை முன்னிட்டு அரசாங்கத்தார் உத்தரவின்படி 24 பக்கங்களுக்கு மேல்பட்டு இருத்தல்கூடாது என்ற நிபந்தனையின்பேரில் இனிமேலாக அதாவது இந்த மலர் தொடங்கி 24 பக்கங்களைக் கொண்டுதான் நம் **பூங்கோத்து** வெளிப்படும் என்பதை நம் சந்தா நேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

* * *

**பூங்கோத்தைப்பற்றிப் புகழுரை:**—நம் **பூங்கோத்தில்** பிரசுரமாகி வரும் பற்பல கட்டுரைகளின் நேர்மை சீர்மைகளைப் பற்றி அன்பர்கள் புகழுரைகூறி எமக்கு எழுதிவருகின்றனர். அன்னவரனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றி உரிமையாகும். யாங்களும் எங்களாலானவரை ஆசிரியர்கட்குப் பயனளிக்கவல்ல விஷயங்களை வழக்கம்போல் பிரசுரித்து வருவோம்.

* * *

**New Admissions:**—அடுத்த ஜூலை-மீ இப்பாடசாலையில் சேர்ந்து போதனைமுறைப் பயிற்சி பெற விரும்புவோர் இத[illegible]ல் வரும் ஒழுங்குகளைக் கவனிக்கக்கடவர்:—

I. இப்பாடசாலையில் அச்சிடப்பட்ட அப்ளிகேஷன் பாரத்தை (Application Form) அதில் குறித்துள்ள விதிகளின்

182396

படி பூர்த்திசெய்து, அதை மே-மீ 31-ம் தேதிக்குள் இப்பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு அனுப்பவேண்டும். பாரம் ஒன்றுக்கு 2 அணு வீதம் தபால் ஸ்டாம்பு அனுப்பியே தேவையாகும் பாரங்களைப் பெற்றுக்கொள்ளத்தகும். கத்தோலிக்கர்கள் தத்தம் பங்கு சுவாமியார் மூலமாய் மனு செய்துகொள்ள வேண்டும்.

2. ஷை போதனை பயிற்சிக்கு சேக்கண்டரி கிரேடில் 40 மாணவர்களையும், எலிமெண்டரி ஹையர் கிரேடில் 80 மாணவர்களையும் சேர்த்துக்கொள்ள வசதி ஏற்படுத்தியிருக்கிறது.

3. அடுத்த ஜூன்-மீ 30-ம் தேதி சேவ்வாய்க்கிழமை காலை 8-மணிக்கு இப்பாடசாலைத் தலைமை ஆசிரியரின்முன் ஆஜராகி, ப்ரவேசக்கட்டணம் ரு. 2-0-0 செலுத்தி, ப்ரவேச பரீட்சை எழுதித்தேறாத எந்த மாணுக்கரும் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

குறிப்பு :—1. செக்கண்டரி கிரேடுக்கு: (1) தமிழ் வியாசம், (2) தமிழில் 'பொது அறிவு' ஆகிய இரண்டு பாடங்களிலும்; எலிமெண்டரி ஹையர் கிரேடுக்கு: (1) பொது அறிவு. (2) கணக்கு ஆகிய இந்த இரண்டு பாடங்களிலும் ப்ரவேச பரீட்சை நடத்தப்படும்.

2. ப்ரவேசக்கட்டணம் ரூ. 2-0-0-ல், பரீட்சை நாளன்று சாப்பாடு, இடவசதி, கேள்வி விடைப்பத்திரங்கள், விடைப்பத்திரங்களைத் திருத்துதல் முதலியவற்றிற்கேற்படும் செலவுகள் அடங்கும்.

3. தேர்ந்தெடுக்கப்பட்டவர் அனைவரும் சேர்க்கைப்பதிவு (Admissions) செய்யும்போது ரூ. 10 "டிபாஸிட்" (Deposit) கட்டவேண்டியது அவசியம் ஆகும்.

4. எலிமெண்டரி ஹையர் கிரேடுக்கு வழக்கம்போல் ஸர்க்கார் ஸ்டைபெண்டு (Stipends) வழங்கப்படும்.

# ஆசிரியத்துவமும் அணியியலும்

(M. A. S. Udayar)

அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழியுள் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென்னும் ஐவகையிலக்கணங்களும் சிறப்புற்றிருந்தன; இருக்கின்றன; இருக்கும். எனினும் இவற்றுள் யாப்பு, அணியென்பன தொல்காப்பியமாகக் காணப்படும் தொல்காப்பியத்துள் தனித்த இடத்தைப் பெற்றில. இவையிரண்டும் பொருளதிகாரத்துட் சிறுபிரிவினவாய் அமைந்துள்ளன. இனிப் பிற்காலத்தெழுந் நன்னூலகத்துப் பொருளிலக்கணமும் காணப்படவில்லை. நன்னூற்குப் பாயிரங் கூறப்புகுந்தவர், அப்பாயிரத்துள் "குணகடல், குமரி, குடகம், வேங்கடம்" எனு நான்கெல்லையினிருந் தமிழ்க் கடலுள் அரும்பொருளைந்தையும் யாவருமுணரத் தொகை வகை விரியிற்றருகெனச்......சீயகங்கன் மொழிந்தனனாக முன்னோர் நூலின் வழியே நன்னூற்பெயரின் வகுத்தனன் ஒன்றே கூறிப்போந்தார். எனவே நன்னூலகத்து ஐந்திலக்கணங்களும் தனித்தனியதிகாரங்களாய் ஆதியில் அமைந்திருந்தன என்றும் கால வேறுபாட்டானே, பொருள், யாப்பு, அணியென்னும் மூன்றும் மறைந்தொழிய எழுத்துச் சொற்களே இறவாதெஞ்சி நிற்கின்றன என்பது புலப்படும். ஆக ஐந்திலக்கணங்களும் கற்கப் புகுவார் இடருறுவண்ணம் ஆசிரியன் ஐனரிதனும், நாற்கவிராஜ நம்பியும், அமுதசாகரனும், தண்டியும் முறையே புறப்பொருள் வெண்பா மாலை, அகப்பொருள் விளக்கம், (யாப்பருங்கலம்) யாப்பருங்கலக்காரிகை தண்டியலங்காரம் என்ற பெயர்களால் சிறந்த நூல்களையியற்றியுலகிற்குதவுவாராயினர்.

ஆங்கிலக் கல்வி தமிழகத்துட் புகுந்து அரசியல் மொழியென்ற சிறப்போடு அனைவருள்ளத்தையும் கவர்ந்து விளங்கவே தமிழ் மொழியை விரும்பிக் கற்பாரும் பாதுகாப்பாரும் அருகினமையானும், அரசியற் குழப்ப முதலிய பிறகாரணங்களானும், ஒல்காப் புகழுடைய பல்காப்பியங்களும் இலக்கணங்களும் பிறவும் அழிந்து ஒழிந்தனவாக. இடைக்காலத்திற் றமிழ்க் கல்வியை விரும்பிக் கற்ற சிலருட் பலர் இலக்கணக் கலையைப் போற்றாதொழிந்தனர். சிலருட் சிலரே இலக்கணமின்றேல் இலக்கியமின்று என்பதை உணர்ந்து கற்பாராயினர். அவருள்ளும் பலர்

எழுத்திலக்கண முதலாய ஐந்தனுள் சிலவே பயின்றனர். நூற்று
விகிதத்தில் இரண்டொருவரே ஐந்திலக்கணங்களும் பயின்று
பாண்டித்தியம் பெறுவாராயினர். அவ்வைந்திலக்கணங்களும்
பயின்றோரிற் பலர் எழுத்துச் சொல்லிலக்கணங்கட்கு நன்னூ
லையும் பொருளிலக்கணத்திற்குப் புறப்பொருள் வெண்பா மாலை,
அகப்பொருள் விளக்கங்களையும், யாப்பிலக்கணத்திற்கு யாப்ப
ருங்கலக்காரிகையையும், அணியிலக்கணத்திற்குத் தண்டியலங்கா
ரத்தையும் விரும்பிக் கற்பாராயினர். ஐந்திலக்கணத்தையும்
ஒருங்கே பகரும் எளிய நடையிலமைந்த நூலின்மையானும்
சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச் செவ்வனடியிற்
செறித்தினிது விளக்கிய சூத்திரங்களை ஆங்கிலக் கல்வியோடு
தமிழ் மொழியையும் மருந்தேபோல் ஊட்டுவிக்கப்பெற்ற மாண
வர் ஏற்றுக்கோடல் எளிதன்றாகையானும் தாய்மொழிப் பயிற்சி
யும், அதனுள்ளும் இலக்கணப் பயிற்சியும் இல்லாவிடின் மாண்
பயனுறுதல் கூடாமையானும், பிற்காலத்தாசிரியர் பலர் தம்
ஆராய்ச்சித் திரத்தானே ஐந்திலக்கணங்களையும் சுருக்கி வசன
நடையில் எளிய பாஷையில் எழுதிப் போந்தனர்.

அவருள் விசாகப் பெருமாளையர், ஜீ. யு. போப்பையர், முத
லானோர் தலை சிறந்தார். அவர் நூலுள்ளும் சிலவற்றைத்
தொகுத்துச் சில ஆசிரியன்மார் மாணவர்க்குப் போதிக்கின்றனர்.
அச்சிலவற்றுள்ளும் யாப்பணியிலக்கணங்களும், அவற்றுள்
அணியிலக்கணமும் கைவிடப்படுகின்றன. அவற்றை ஆராய்
வாம்.

---

## யோசனைக் கணக்கு விடை

(கொத்து 32, மலர் 9, பக்கம் 273.)

விடை :—(1) $\frac{1}{12}$ நாள் = 2 மணி.

(2) 1250 கற்கள்.

---

# விடுமுறையும் ஓய்வும்

(P. G. S. Aiyar, B. A., L.T.)

கோடை ஆரம்பித்து விட்டது. பள்ளிக்கூடங்கள் ஒன்றின் பின் ஒன்ருய் மூடப்படுகின்றன. யுத்த நிலைமையின் காரணமாகவும் சில பள்ளிகள் முன்னதாகவே மூடப்படுகின்றன. யாவரும் மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக்கொண்டு விடுமுறைக்காகக் காத்திருக்கின்றனர். வெயிலின் கோரமும் சொல்லி முடியாது. இந்தக் கோடை முன்னெல்லாவற்றையும் தூக்கியடிக்கக்கூடியதாய்த் தோன்றுகிறது. "இதைப்போல் ஒரு வருஷமும் இருந்ததில்லை" யென்று சத்தியம் செய்யவும் சிலர் தயாராயிருக்கின்றனர். அவர்கள் அவ்விதம் உறுதிமொழி கூறுவதில் வியப்பில்லை. போன வருஷத்துக் கோடையை மறந்து விட்டோம். அதன் உக்கிரம் நம் மனதினின்று மறைந்து விட்டது. மனதின் தன்மையே அது, தன் கஷ்டங்களை மறந்துவிடும். சந்தோஷத்தை மாத்திரம் விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டு ஆறுதலடையும். வாழ்க்கையில் கசப்பு ஏற்படாமலிருப்பதற்குமிதுவே காரணமாகும். மனவமைப்பின் அதிசயங்களில் இதுவுமொன்ருகும்.

கோடையில் பாலர்களால் கற்கமுடியாது எளிதில் களைப்படைவர். அவர்களுக்கு ஓய்வு அவசியம். அதையொட்டி யாசிரியர்களுக்கும் விடுமுறை கிடைக்கிறது. அதனை எவ்விதம் செலவழிப்பது என்பதுதான் பிரச்னை. ஓய்வு எடுத்துக்கொள்ளவும் வேண்டும்; முன்னேற்றத்திற்கான சிறு அலுவல்களைச் செய்யவும்வேண்டும். இந்தப் பிரச்னையை உங்கள் முன் சமர்ப்பித்து எனக்குத் தோன்றிய சில விஷயங்களை வற்புறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இந் நோக்கத்தை நிறைவேற்ற முதலில் ஓய்வு என்பது யாது என்பதை ஆராய வேண்டியிருக்கிறது. இவ்வோய்வை ஆங்கிலத்தில் leisure என்று சொல்லுவார்கள். ஒரு வேலையில் ஈடுப்

பட்ட ஒருவன் மற்றொரு வேலையில் மனச் சந்துஷ்டிக்காக ஈடு படுவானாயின் அதுவே ஓய்வாகும். வக்கீலுக்குப் பந்து விளை யாடுவது ஓய்வாகும். மல்லனுக்குப் படிப்பது ஓய்வாகும். நாம் வழக்கமாக விடாமல் நிர்ப்பந்தத்தின்மேல் செய்யும் வேலைக்கு மாற்றாக வேறொரு வேலையைக் கைக்கொண்டால் மனது சாந்தி யடையும். சலிப்பும் வெறுப்பும் நீங்கப் பெறுவோம். இது மனநூல் கூறும் உண்மை.

இக் கூற்றை யடிப்படையாகக்கொண்டே நாம் எவ்விதம் நமது விடுமுறையைக் கழிப்பது என்ற பிரச்னையைச் சர்ச்சை செய்யவேண்டும். நாம் ஓய்வு எடுத்துக் கொள்வதென்றால் கை யைக் கட்டிக்கொண்டு திண்ணையில் உட்கார்ந்திருப்பதல்ல. நமக் குப் பிடித்தமான ஏதாவது ஒரு வேலையில் ஈடுப்படுவதாகும். அத்தகைய வேலைகளைத் தேர்ந்தெடுப்பதில் நாம் சிறிதளவு கவ னம் செலுத்தினால் அதனால் நாம் சந்தோஷப்படுவதுடன் பள்ளி யும் பயனடையும். வெட்டிப் பேச்சுப் பேசிப் பொழுதைக் கழிப் பதைவிட இவ்வித வேலை நாளடைவில் மனதிற்குகந்ததாய் விடும். மாணவரையும், வெயிலில் அலையவிடாமல் உற்சாகமுடன் ஈடு படச் செய்யலாம்.

நாம் பின்பற்றக்கூடிய வேலைகளாவன :—

1. தினசரி காலையில் அல்லது மாலையில் பள்ளியில் கூடி அதனை சுத்தம் செய்யவும் அலங்கரிப்பதுமான வேலைகளைக் கொஞ் சம் கொஞ்சமாகச் செய்தல்.

2. தோட்டத்தைச் செப்பனிடுதல். கோடையானதால் நீர் வசதி எளிதில் அமையாது. வேலி முதலியன கட்டலாம். நடுவில் மேடை அமைத்து வளைவு கட்டலாம். பள்ளி ஆரம்பித்த வுடன் இவை சோலையுடன் விளங்கும்.

3. படங்கள் முதலியவைகளைச் சேகரித்து அதனைச் சீர் படுத்தி ஒழுங்காக அடுக்கி (Album) ஆல்பமாக அமைத்தல்; படங்களைப் பாகுபாடு செய்து ஒரு அநுபந்தம் தயாரிக்கலாம்.

4. இயற்கைப் பொருட்களை நாளொன்றுக்குச் சிலவாகச் சேர்த்தல். அவைகளைப் பாகுபாடு செய்து ஒழுங்கு படுத்த லவசியமாகும். (Classification)

5. எழுத்தாளர்களாயிருக்கும் ஆசிரியர்கள் பாடங்களை நாடகங்களாகவும் சம்பாஷணைகளாகவும் திருத்தியமைத்து நடித்தலுக்கேற்றவையாகச் செய்தல்.

இங்கு கூறியிருக்கும் விஷயங்கள் ஒரு சில உதாரணங்களேயாம். இவைகளைப் போன்ற அநேக வேலைகளில் பொழுதைக் கழிக்கலாம். அவரவர்க்கேற்ற வேலையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். விடுமுறை முழுவதும் ஒரே வேலையைத்தான் செய்யவேண்டு மென்ற நிர்ப்பந்தமுமில்லை. ஆசிரியர்கள் தமக்குள் வேலைகளை மாற்றிக்கொள்ளலாம். இங்கு சமர்ப்பித்துள்ள பட்டியலில் பேசுவதற்கும் உல்லாஸமாகக் காலத்தைக் கழிப்பதற்கும் சந்தர்ப்பமில்லையே என்ற கேள்வி பிறக்கலாம். மாலையில் ஆசிரியர்கள் சோலையிலோ ஆற்றங்கரையிலோ கூடிப் பத்திரிகைகள் படித்துப் பல விஷயங்களைப் பற்றிச் சாங்கோபாங்கமாக விவாதிக்கலாம். எதற்கும் மனமும் திண்மையும் வேண்டும். அவையிருந்தால்தான் எடுத்த காரியத்தில் சித்தி அடையமுடியும்.

---

## யோசனைக் கணக்கு

(M. Rengaraj, Selvavinayagar Elem. School, Beemanagar, Trichy.)

I. ஒருவன் வழக்கமாக செல்லும் நேரத்தில் $\frac{1}{2}$ மணிகூட்டினால் வேகத்தில் $\frac{1}{8}$ பங்கு குறையும், அவன் வேகம் என்ன?

II. நான் வழக்கமான நடையில் $\frac{3}{4}$ பங்கு நடந்தால் கச்சேரிக்கு 10 நிமிஷம் தாமதமாகச் செல்கிறேன். நான் வழக்கமாக கச்சேரிக்குப்போக எடுத்துக்கொள்ளும் காலம் என்ன?

---

# சுருக்கமான பாடக்குறிப்புகள்

# (Out-line notes of Lessons)

வகுப்பு போதனையின்பொருட்டு நாம் பாடக்குறிப்புகள் எழுதி நம்மை ஆயத்தம் செய்துகொள்வது அவசியம். ஆயினும் தினசரி எல்லாப் பாடங்களுக்கும் முழுப் பாடக்குறிப்புகள் எழுதிவருவது அசாத்தியம். ஆகவே, தினசரி ஒரு வகுப்புக்குப் போதிக்கவேண்டிய பாடங்கள் சம்பந்தமாய் சுருக்கமான பாடக் குறிப்புகள் தயாரித்துக்கொள்வது உசிதமாகும். எனவே இத னடியில் III-வது வகுப்புக்கு நான்கு பாடங்களுக்குப் பாடக் குறிப்புகள் மாதிரியாகக் காண்பிக்கப்பட்டுள்ளன. நம் ஆசிரிய நேயர்கள் அதைப்போல் அந்தந்த வகுப்புக்குரிய தினசரி சுருக்க மான பாடக்குறிப்புகளை உசிதம்போல் தயாரித்துக்கொள்ளுவார் களாக.

## I

வகுப்பு : III. பாடம் : தமிழ் வாசகம். நோக்கம் :—“ஒரு குரங்கின் சேஷ்டை.” (முதல் இரண்டு பாராக்கள்) வாசிப்பும், பயிற்சியும்.

**பீடிகை** :—குரங்கின் குணத்தைப்பற்றி சம்பாஷிக்க. (பேச்சுப் பயிற்சி.)

**மௌனவாசிப்பு** :—(விஷய சாராம்சம் கூறச்செய்தல்.)

**விஷயம்** :—1. ஓர் ஊரில் ஒரு பிரபு இருந்தார். அவர் ஏழைக ளிடம் அன்பாக இருப்பார். அவர் ஒரு பங்களாக் கட்ட நினைத்தார். காட்டிலிருந்து பெரிய மரக்கட்டைகளை வெட்டிக்கொண்டுவந்து தன் தோட்டத்தில் அடுக்கி வைத்திருந்தார்.

2. வாட்காரர்கள் தினந்தோறும் வந்து அக்கட்டைகளை வேண் டிய அளவுப்படி வாளால் அறுத்துவந்தார்கள். ஒருநாள் ஒரு நீண்ட மரத்துண்டை இரண்டாகப் பிளக்கும்பொருட்டு வாளால் அறுத்துக் கொண்டிருந்தார்கள். மத்தியான வேளையாயிற்று. மரக்கட்டை பாதிதூரம்தான் அறுக்கப்பட்டிருந்தது. அறுக்கப்பட்ட பாகங்கள் ஒன்றுகூடாது இருக்கும்பொருட்டு அவைகளுக்கு இடையில் அறு வாயில் ஒரு மர முளையை வைத்துவிட்டுச் சாப்பிடச் சென்றார்கள்.

**கடினபத விளக்கம்** :—சேஷ்டை=குறும்பு; பங்களா=பெரிய வீடு; வாள்=ரம்பம்; வாட்காரன் (வாள்+காரன்) மூளை=ஆப்பு; வாள்; வால்; வாழ் (உச்சரிப்பு); பணக்காரன்×ஏழை; நீண்ட×குட்டையான......

**பயிற்சிகள்** :—(1) மரக்கட்டைகள் எங்கே அடுக்கி வைக்கப்பட்டிருந்தன?

(2) வாட்காரர்கள் மூளையை எங்கே வைத்தார்கள்? ஏன்?

(3) மத்தியான வேளையாயிற்று. வாட்காரர்களுக்குப் பசித்தது. (இவ்விரு வாக்கியங்களையும் ஒரே வாக்கியமாக்குக.)

(4) பொருட்டு; அடுக்கி; தினந்தோறும்—இவை ஒவ்வொன்றையும் சொந்த வாக்கியத்திலமைக்க.

குறிப்பு :—பாடப்புத்தகத்திலுள்ள விஷயத்தை எழுதத் தேவையில்லை. பாடம், பாரா—எவை என எழுதினல் போதும். பீடிகைக்குப்பின், மௌன வாசிப்பு—பிள்ளைகளின் தேர்ச்சிக்குத் தக்கபடி நடத்தவும்.

(தொடரும்.)

---

## எதனல்?

(A. Asirvatham)

1. பிள்ளைகளுண்டு வளர்வதெதனல்?
விளக்கு நின்று எரிவதெதனல்? } எண்ணெய்யினல்.

2. மாணவர் பயந்து படிப்பதெதனல்?
மாடு வலிமை தெரிவதெதனல்? } கொம்பினல்.

3. போதனு பூங்கொத்து உலாவுவதெதனல்?
புஷ்பச்செடிகள் கவர்வதெதனல்? } வாசனையினல்

4. மக்கள் நெல்லை அளப்பதெதனல்?
தரணியில் குளங்கள் அமைவதெதனல்? } படிகளால்

---

# பூகோளம் போதிப்பதெப்படி ?

## (I. Anthony)

(கொத்து 32, மலர் 9, பக்கம் 267ன் தொடர்ச்சி)

இனி ஸ்தல பூகோள போதனையைப்பற்றிச் சிறிது பார்ப்போம். தற்போதிய பாடத்திட்டத்தை நாம் சிறிது உற்று நோக்குவோமாயின் அதில் ஸ்தல பூகோளம் வெகுவாக வற்புறுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். இதன் நோக்கம் மாணவர்கள் தங்களைச் சுற்றியுள்ளவர்களைப்பற்றி நன்கு அறிந்திருத்தல் வேண்டுமென்பதேயாகும். ஏனெனில் இந்த அறிவானது பின்னால் அவன் கற்கப்போகும் இந்தியா உலக பூகோளத்திற்குப் பெரிதும் உதவி செய்கிறது. மேலும் தெரிந்தவற்றிலிருந்து தெரியாதவற்றைப் போதிப்பது பூகோள பாடத்தின் முக்ய தத்துவமாகும். ஆகவே மாணவர்கள் இந்தியா, உலக பூகோளத்தைப் படிக்கும்போது ஸ்தல பூகோளத்தில் அவர்கள் நேரில் பார்த்தவைகளையும், கற்றவைகளையும், பொருத்தமான இடங்களில் சம்பந்தப்படுத்திப் போதிப்போமானால் எளிதில் அறிந்து கொள்வார்களல்லவா? உதாரணமாக, ஸ்தல பூகோளத்தில் காவேரியைப்பற்றி படித்த மாணவர்களுக்கு, கங்கை நதியைப் பற்றி போதிக்கவேண்டுமென்பதாக வைத்துக்கொள்வோம். காவேரியின் இருகரைகளில் நெல்லும் கரும்பும் சாகுபடியாவதைப்போல் கங்கையின் இருகரைகளிலும் நெல், கரும்பு, கோதுமை முதலியவைகள் சாகுபடியாகின்றன. காவேரியின் கரையில் திருச்சி, தஞ்சை முதலியன முக்கிய பட்டணங்கள். கங்கையின் கரையில் அலஹாபாத், பாட்னா முதலியன முக்கிய பட்டணங்கள். இங்கு ஸ்ரீரங்கம் இந்துக்களின் புண்ணிய ஸ்தலம். அங்கு காசி புண்ணிய ஸ்தலம். காவேரியின் முகத்துவார பிரதேசத்தில் நெல் ஏராளமாக சாகுபடியாகிறது. ஆனால் கங்கையின் முகத்துவாரத்தில் சணல் அதிகமாகப் பயிராகிறது. ஆகவே பெயர்கள்தாம் வித்தியாசப்படுகின்றனவேயொழிய மற்றப்படி எல்லாம் ஒன்றுதானென்று இவ்விதமாய் நாம் ஒன்றோடொன்று சம்பந்தப்படுத்திப் போதிப்போமானால் பிள்ளைகள் சுலபமாகத் தெரிந்துகொள்வார்களல்லவா? எனவே ஸ்தல பூகோளமானது தற்போதிய பாடத்திட்டத்தில் பெரிதும் இடம் பெற்றிருப்பது ஆச்சர்யமாகாது.

182306

ஸ்தல பூகோள போதனு விஷயத்தில் நாம் புகுமுன் ஸ்தல மென்பது என்னவென்று நன்கு தெரிந்திருத்தல் அவசியமாகும். பாடசாலை அமைந்துள்ள நகரம், அல்லது கிராமம் ஸ்தலமாகும். இவ்விதம் தெரிந்துகொண்டபின், நாம் போதிப்பதற்கும், மாண வர்கள் நன்குத் தெரிந்துகொள்வதற்கும், சுலபமாயிருக்கும் பொருட்டு அந்த ஸ்தலத்தின் இயற்கையமைப்பையொட்டி அதை கீழ்கண்டபடி பிரித்துக்கொள்ளவேண்டும். 1. திக்குகள் 2. இயற்கையமைப்பு (குன்றுகள், மலைகள், பள்ளத்தாக்குகள், ஆறு கள், சமவெளிகள், முதலியன) 3. சீதோஷ்ணஸ்திதி (காற்று, மழை, உஷ்ணம், குளிர் முதலியன) 4. விளைபொருள்கள் 5. கைத் தொழிலும் ஜனவாழ்க்கையும் 6. போக்குவரவு சாதனங்கள். இவ்விதம் பிரித்துக்கொண்டபின் ஒவ்வொன்றையும் தனித் தனியே எடுத்துப் போதித்தல் வேண்டும்.

**திக்குகள்** :—இப்பாடம் போதிக்கும்போது மாணவர்களை விளையாடும் இடங்களுக்கு அழைத்துச்சென்று அவர்களுக்கு நான்கு திசைகளையும், அவைகளை எப்படி நிதர்சனமாய்க் கண்டு பிடிப்பதென்பதையும் (சூரியன் உதிக்கும் பக்கம் கிழக்கு, மறை யும் பக்கம் மேற்கு, சூரியன் உதிக்கும் பக்கத்தைப் பார்த்து நின்றுகொண்டால் நமது வலது கைபக்கம் தெற்கு, இடது கை பக்கம் வடக்கு) போதித்தல் வேண்டும். அதை மாணவர்கள் சரியாக தெரிந்துகொண்டார்களாவென்று பரிசோதிக்க கீழ் வரும் கேள்விகளைக் கேட்கலாம்.

1. நமது வகுப்பிற்கு எப்பக்கத்தில் வாசற்படி இருக் கிறது?

2. பள்ளிக்கூடத்தின் முகப்பு எப்பக்கம் இருக்கிறது?

3. நமது ஊருக்கு எப்பக்கங்களில் என்னென்ன இருக் கின்றன?

4. பள்ளிக்கூடத்திற்கு எந்தப்பக்கத்தில் கோயில் இருக் கிறது?

மேல் வகுப்புகளுக்கு குச்சியை நட்டு அதன் நிழலின்மூலம் திசையை அறிவிக்கலாம். பின்பு நான்கு முக்கிய திசைகளை காட்டும் படங்களை வரைந்துகொண்டு வரச்செய்து அதில் நன்று யிருப்பதை வகுப்பறையில் தொங்கவிடலாம்.

**இயற்கையமைப்பு** :—அருகிலுள்ள மலைகளுக்கோ, குன்றுகளுக்கோ, சமவெளிகளுக்கோ, மாணவர்களை அழைத்துச்சென்று இப்பாடம் போதித்தல் வேண்டும்.

**சீதோஷ்ணஸ்திதி** :—எவ்வெக்காலங்களில் காற்று, மழை, உஷ்ணம், குளிர் முதலியன அதிகமென்று குறித்து வரச்செய்து அவைகளை வகுப்பறையில் தொங்கவிடவேண்டும். அதிலிருந்து ஒரு வருஷத்தில் எங்கெந்த மாதங்களில் காற்று, மழை, உஷ்ணம், குளிர் முதலியவைகள் அதிகம் அல்லது குறைவென்றும் கண்டுபிடிக்கச் செய்யவேண்டும். சில தினசரி பத்திரிகைகளில் முக்கியமான இடங்களின் அன்றுட உஷ்ணத்தின் அளவைக் குறித்திருப்பார்கள் அதை உபயோகப்படுத்திக்கொள்ளலாம்.

**விளைபொருள்கள்** :—அருகிலுள்ள நிலங்களுக்கு மாணவரை அழைத்துச்சென்று இப்பாடம் போதித்தல் வேண்டும். எங்கெந்த நிலத்தில் எங்கெந்த பயிர்கள் விளைகின்றனவென்றும், குறிப்பிட்ட ஒரு பயிர் விளைவதற்கு ஏற்ற நிலம் எதுவென்றும் மாணவர்கள் உற்றுநோக்கி யறியவேண்டும். உதாரணமாக பருத்திவிளைவதற்கு கரிசல்மண் ஏற்றது. உலகத்தில் எங்கெங்கு கரிசல்மண் நிலங்கள் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் பருத்தி விளையுமென்று போதித்தல்வேண்டும்.

**கைத்தொழிலும் ஜனவாழ்க்கையும்** :—அருகில் ஏதாவது கைத்தொழிற்சாலைகள் இருந்தால் அவ்விடங்களுக்கு மாணவரை அழைத்துச்சென்று அங்கு தொழில் நடப்பதை கவனிக்கச்செய்யவேண்டும். தாங்கள் இருக்கும் ஸ்தலத்தில் என்னென்ன கைத்தொழில்கள் நடக்கின்றனவென்றும், அவைகள் அங்கு நடப்பதற்கு என்ன சாதனங்கள் அமைந்திருக்கின்றனவென்றும் கவனிக்கும்படி செய்தல்வேண்டும். (உதாரணமாக திருச்சியை எடுத்துக்கொள்வோம். இங்கு கோரைப்பாய் நெய்தல் ஒரு முக்கிய குடிசைத் தொழில். இங்கு காவேரிக் கரையில் ஏராளமான கோரை அகப்படுவதால் அத்தொழில் நடக்கிறது.) அருகில் சந்தை கூடும் இடங்களுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று அங்கு விற்பனையாகும் பொருள்களில் அங்கு செய்யப்பட்டவைகள் எவையென்றும், வெளியிலிருந்து வந்தவைகள் எவையென்றும் கவனித்துக் குறித்துக்கொள்ளும்படி செய்தல் வேண்டும்.

**போக்குவரவு சாதனங்கள்** :—தாங்கள் இருக்கும் இடத்திலிருந்து மற்ற இடங்களுக்குச் செல்லும் மார்க்கங்கள் எவையென்றும், கவனித்து படங்கள் தயாரித்து வகுப்பறையில் தொங்கவிடவேண்டும். அந்த மார்க்கங்கள் அவ்விடங்களுக்குச் செல்லவேண்டிய காரணத்தையும், கவனிக்கவேண்டும்.

ஸ்தல பூகோளம் போதிக்க வகுப்பறை ஏற்றதல்ல. நம்மால் கூடுமானவரை ஸ்தல பூகோள பாட சம்பந்தமான பற்பல இடங்களுக்கு மாணவர்களை அழைத்துச்சென்று, பூகோள சம்பந்தப்பட்டவைகளை நேரில் காட்டிப் போதித்தல் வேண்டும். ஸ்தல பூகோள அறிவே மாணவர் பின்னுல் கற்கப்போகும் இந்தியா, உலக பூகோள அறிவிற்கு அஸ்திவாரமாயுள்ளது. ஸ்தல பூகோள அறிவில் ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு தேர்ச்சியுறுவனே, அவ்வளவுக்கவ்வளவு அவன் இந்தியா, உலக பூகோளத்திலும் தேற்சியுறுவான். ஸ்தல பூகோளத்தில் மாணவர்கள் பூகோள சம்பந்தப்பட்டவைகளை நேரில் பார்ப்பதினுல் நாம் போதிப்பது அவர்கள் மனதில் பசுமரத்தாணிபோல் பதியும்.

(தொடரும்.)

---

## விடுகதை விடை

(கொத்து 32, மலர் 9, பக்கம் 275.)

**விடை** :—பருத்தி. பருத்திச்செடி—பூ—குங்குமப்பொட்டு என்பது, பருத்திப்பூவின் இதழின் உட்பக்கத்திலிருப்பது. விலை கூறுவது புடவை. நக்குவது, நூல் இழைகளை நக்கி இணைத்தல்.

விடையளித்தவர்கள் :—(1) T. R. Mahadeva Aiyar, H. M., Pedhanayakanur. (2) Vedamuthu, Labour School, Uppilipalayam.

---

# ரஸ்தா விதி

(A. Rayappan)

எல்லாருக்கும் பொதுவானது. எல்லாரும் உபயோகிக்கக் கூடியது. துரிதமாக ஓடும் வாகனமுதல் உல்லாசமாக நடக்கும் நண்பர் வரையிலும், தோட்டிமுதல் தொண்டமான் வரையிலும், பள்ளிப்பாலர் பிணியாளர் முதலிய சகலருக்கும் பொதுவானது. அது என்ன? அதுதான் ரஸ்தா—சாலை (Road.)

சாலையில், வண்டிகள் (Wheeled vehicles) இடது புறமாகவும், (Pedestrians) நடப்பவர்கள் வலதுபுறமாகவும் செல்ல வேண்டும். ஏனெனில், நீ ரஸ்தாவின் வலதுபுறமாகச் செல்லும் பொழுது இடதுபுறமாக உனக்கு எதிர்வரும் வண்டியை இலகுவில் அறிந்து விலகமுடியும். ஆனால் நீயும் சாலையின் இடதுபுறமாகவே செல்லுவாயானால் அப்பக்கமாகவே உனக்குப் பின்னால் வரும் வண்டி உன்னை இடித்து ஆபத்துண்டாக்கலாம். ரஸ்தாவில் செல்லும்பொழுது நேர்முகமாகவும் மறைமுகமாகவும் அறிவுறுத்தப்படும் விதிகளை அனுசரித்தலவசியம். மிக ஜாக்கிரதையாக ரோட்டில் செல்லுவதும் நடப்பவர்கள், பாலர், பிணியாளர்களை வெகு ஜாக்கிரதையுடனும் கவனமாயும் அணுகிச் செல்லுவதுமே மறைமுகமாக அறிவுறுத்தப்படும் விதியாகும்.

அலட்சியத்தாலும், பதபதஷ்டத்தாலும், விளையும் ஆபத்துக்கள் அனந்தம். முன் ஜாக்கிரதையும் கவனமும், மன நிம்மதியுமே தற்காப்பிற்கவசியம்.

**நடந்துசெல்லும் நண்பரே கவனியுங்கள் :—**

1. குறித்தவேகத்தில் ஓடும் துரிதவண்டியை, வேண்டுமென்றோ அல்லது தற்செயலாகவோ தடுக்க உங்களுக்கு உரிமை இல்லை.

2. ஆகையால், சாலையின் ஒருபுறம் தனிப்பட்ட நடைப்பாதை இருக்குமாகில் அவ்வழியே செல்லவும். நடைப்பாதையற்ற ரஸ்தாவில் வலது ஓரமாக நடக்கவும்.

3. நடந்துசெல்லுங்கால், மோட்டார் ஹார்ன் சப்தம் கேட்குமாகில், நீ அச்சப்தத்தை அறிந்ததினறிகுறியாகத் தலைக்குமேல் கையை உயர்த்திச்செல். ஏனெனில் உன் முன் ஜாக்கிரதையை மோட்டார் டிரைவர் அறிகிறான். மதியீனமாக நெருக்கடியான சமயத்தில் குறுக்கே விழுந்து ஆபத்தடையமாட்டாயென்பதை அறிந்து தன்னை சரிப்படுத்திக்கொள்வான்.

4. சாலையில் நடக்கும்பொழுது, அவசரமாக ஏதேனும் வாசிக்கவோ அல்லது ஆப்த நண்பரைச் சந்தித்துப் பேசவோ

நேரிடுமாகில் நடைப்பாதைக்குப் போகவும். அல்லது சாலையின் இரு மருங்குகளுமே எற்றவை. ஒருபொழுதும் ரோட்டின் மத்தியிலிருந்தோ அல்லது மாறான பக்கமிருந்தோ எதும் செய்யத் துணியாதே. ஆபத்துற்றவரைக் காப்பாற்ற முயலுக. ஆனல் வேடிக்கைப்பார்த்து நிற்காதே.

**சைக்கிலில் செல்லும் சூரர்களே கவனியுங்கள் :—**

ஆபத்துக்களின் மூல காரணமும் ஆபத்தடைபவர்களும் நீங்களே. கூடினமட்டும் இடது பக்கமாகவே சைக்கிலைச் செலுத்துங்கள். மோட்டார் ஹார்ன்சப்தம் காதில் பட்டவுடன் தலைக்குமேல் கையை உயர்த்திக் கவனமாய் வண்டியைச் செலுத்தவும்: சாலையைக் குறுக்காகக் கடந்து செல்லும்பொழுதும் ஆபத்தை எதிர்ப்பார்க்கிறபொழுதும் வலதுபக்கம் இடம்விட்டு வண்டியை நடத்தவும்.

**ஆனல் :—**

1. மற்ற வண்டிகளோடு போட்டியிட்டுச் செல்லாதே
2. மோட்டாரின் பின்புறம் நெருங்கி வண்டியைச் செலுத்தாதே.
3. மற்றொரு சைக்கிலையும் உடன் நடத்திச் செல்லாதே.
4. மோட்டாரின் பக்கமாக நெருங்கிச் செல்லாதே.
5. போக்குவரத்துக்களை ஒழுங்குப்படுத்தும் போலீஸ்காரனின் சைக்கினையை பின் பற்றாமல் வேறொருபுறமாக வளைந்து வளைந்துச் செல்லாதே. (ஆபத்து நிச்சயம்.)
6. அவசரமின்றி மணியடித்து (Bell) மற்றவர்களுக்குத் தொந்தரவு கொடுக்காதே.
7. சைக்கில் கைப்பிடிகளை (Hand bars) பிடிக்காமல் ஒருபொழுதும் வண்டியைச் செலுத்தாதே.
8. சைக்கிலில் செல்லும்பொழுது உனது சாமர்த்தியங்களையும் கற்ற வித்தைகளையும் காட்டி பிரசித்தம் செய்யாதே.

---

## மாயக்குழந்தை உறைபனியால் ஆனது

முன்னொருகாலத்தில் "ஐவான்" என்ற ருஷிய கிருஷிகன் ஒருவன் தனது இல்லக்கிழத்தி "மரியா" வுடன் வசித்துவந்தான். அவர்களின் வாழ்க்கையை நாசப்படுத்தினது புத்திரரில்

லாத குறையொன்றே. ஒரு மாரிகாலத்தில் ஒருநாள் அதிகமாக பனி உறைந்து கீழே விழ, நமது கிருஷிகரின் வீட்டைச்சுற்றி உறைபனி மூடிக்கொண்டிருந்தது. விடிந்ததும், இருவரும் பனியை அப்புறப்படுத்திக் குவிக்க, அக்குவியல் ஒரு குழந்தை உருவமாக இருந்தது. பிறகு அப்பனிக்குவியலை உருப்படுத்தி, இரண்டு சீன ஊதாக் கற்களால் கண்கள் அமைத்து குழந்தையின் உருவத்தை முடிக்க, அப்பனி உருவம் இரு கரங்களையும் உயர்த்திப் புன்முறுவலுற்றது. உடனே அவர்கள், அவ்வுருவம் யாரென்று வினவ அது சொன்னதாவது: "நான்தான் உங்களுடைய குழந்தை; உறைபனியால் நீங்கள் என்னை உருவாக்கினீர்கள்; பனிச் செதில்கள் எல்லாம் (Snow flakes) சந்திர பகவானின் மக்கள். அச்செதில்கள் ஏதாவதொரு உருவமாக ஆக்கப்பட்டால், அவ்வுருவம் உயிர்பெற்று உலகில் வாழமுடியும். அப்படியே நானும்." உடனே, ஐவானும் மரியாவும் மகிழ்ச்சியடைந்து அக்குழந்தையை முத்தமிட்டுத் தங்களுடன் வாழ அழைத்துச் சென்றனர். அயலார் எல்லாரும் அக்குழந்தையை நேசித்தார்கள். ஐவான் அக்குழந்தையை "பனி" என்று பெயரிட்டு வளர்த்துவந்தான். "பனி"யும் தனது பொன்னிற மேனியாலும் கூந்தலாலும் எல்லாரையும் மகிழ்வித்து இஷ்டம் போல் ஆடிப்பாடி அனைவரையும் இன்புறச் செய்தது. குளிரால் அவ்விநோதக் குழந்தை கஷ்டமடையவில்லை. வசந்தகாலத்தில் தோன்றிய மலர்களை ஆச்சரியத்துடன் நோக்கி, கோடைக்காலம் நெருங்க, "பனி" துன்புற்று முந்தியபடி சந்தோஷம் இல்லாமல் குடிசையின் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தது. கோடைக்காலத்தில் ஒருநாள் அயல்வீட்டுக் குழந்தைகள் ஒன்றுகூடி காட்டிற்குச் சென்று ஆடி மகிழ "பனி"யையும் வேண்டின. "பனி"க்கு பிரியமில்லாமலிருந்தும் மரியாவின் கட்டாயத்திற்காகத் தன் சினேகிதிகளுடன் காட்டுக்குச் சென்றாள். பிறகு திரும்பியதும் அன்று மாலை தீவளர்த்து அதைச்சுற்றி நடனமாடி விளையாட ஆரம்பித்தார்கள். ஆனால் நெருப்பு, சுவாலைவிட்டு எரிய, நமது பெண் "பனியும்" நடனமாடத் துவக்கினாள். உடனே அவள் மெல்லிய நாற்றாக உருகவே ஒருவித சந்தோஷத்துடன் "பனி" மறைந்தது. ஐவான் அதிக வருத்தப்பட்டான். ஒவ்வொரு முறையும் பனிக்காலத்தில் "பனி" மறுபடியும் உறைபனிச் செதில்களாகத் தோன்றி கிருஷிகர்களை மகிழ்விக்கும்.

---

# பெற்றோர் சங்கக் கூட்டங்கள்

குறிப்பு:—மாதாமாதம் பெற்றோர் சங்கங்களைப்பற்றிய நிகழ்ச்சிகள் ஏராளமாய் வந்துகொண்டிருக்கின்றன. அவை எல்லாவற்றின் முழு விவரங்களையும் நம் பூங்கொத்தில் பிரசுரிக்க இடமில்லையாதலால் சுருக்கமான குறிப்புகளை மாத்திரம் ஒருவாறு பிரசுரிக்கின்றோம். மேலும், நம் பத்திரிகை பிரதி மாதம் 20-ம் தேதிக்குள் அச்சுக்குப் போய்விடுமாதலால், முன் மாதம் 20-ம் தேதிக்குள் எமக்கு வந்து சேராத எந்த விஷயமும் பிரசுரமாகுமென எதிர்பார்க்க முடியாது.

பத்திராதிபர்.

1. திருச்சி தாலுகா எட்டரை போர்டு உயர்தர ஆரம்பப் பாடசாலை பெற்றோர் சங்கத்தின் ஆதரவில் 19-2-42 முதல் 22-2-42-வரை "சுகாதார விழா" கொண்டாடப்பட்டது. திருச்சி ரேஞ்சு ஸீனியர் டெப்யூடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ E. V. கோபால அய்யர் அவர்கள் தலைமை வகித்தனர். ஷை தேதிகளில் சுகாதார உபன்னியாசங்களும், படக்காட்சிகளும் நடைபெற்றன. இதனால் ஷை கிராமவாசிகளிடை ஊக்கமும் உற்சாகமும் கல்வியின்பேரில் விசேஷ ப்ரீதியும் உண்டாயிற்று. V. சுப்ரமணியன், தலைமை ஆசிரியர்.

2. எலமனூர் லேபர் பாடசாலை பெற்றோர் சங்கம். இச்சங்கக் கூட்டம் 1-3-42-ல் தமிழ் நாடு ஹரிஜன ஸேவாசங்க ஹாஸ்டல் வார்டன் ஸ்ரீ P. ரெத்தினஸாமி அவர்களின் தலைமையின்கீழ் விமரிசையாய் நடைபெற்றது. S. மரியசூசை, காரியதரிசி.

3. திருச்சி, கண்டோன்மெண்டு, அர்ச். ஆரோக்கியமாதாக் கோவில் ஆண்பாடசாலை பெற்றோர் சங்கத் திறப்பு விழா. இவ்வைபவம் 15-3-42-ல் திருச்சி, அர்ச். சூசையப்பர் கல்லூரி மாஜி தலைமை ஆசிரியர் Rev. Father A. M. Antonisamy, S. J. அவர்களின் தலைமையின்கீழ் வெகு விமரிசையுடன் நடைபெற்றது. பெற்றோர்கள் ஏராளமாய்க் குழுமியிருந்தனர். வித்துவான் திரு. S. குரூஸ் அந்தோனி அவர்கள் பெற்றோர்களின் கடமையைப்பற்றி இனியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். பின்னர் சங்கத்தின் அலுவலாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். A. அருள்சாமி, காரியதரிசி.

4. கரூர் தாலுகா கோட்டா நத்தம் லேபர் பாடசாலை பெற்றோர் சங்கம். இக்கூட்டம் 16-3-42-ல் ஸ்ரீ ராமசாமி நாயுடு அவர்களின் தலைமையில் குதூகுலத்துடன் நடைபெற்றது. P. V. நடேசன், உபாத்தியாயர், காரியதரிசி.

5. ஸ்ரீரங்கம், மேலூர் ஐயனூர் முனிஸிபல் பாடசாலை பெற்றோர் சங்கத்திறப்பு விழா 16-3-42-ல் ஸ்ரீரங்கம் நகராண்மைக் கழக உறுப்பினர் திரு. M. வீரராகவலு நாயுடு அவர்களால் துவக்கப்பட்டது. அவ்வமயம் டாக்டர் ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்கள் "பெற்றோர் சங்கத்தின் நலன்களைப்"பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர்.

S. Varadarajan, Secretary.

---

## நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

7-3-42-ல் நம் பாடசாலைப் பழைய மாணவர் சங்க ஆண்டு விழாவும் பிரிவுபசாரமும் நடைபெற்றது. இதனடியில் விவரம் காண்க.

16-3-42 இன்று மாலை எம் பாடசாலை ஆசிரியர் சங்கத்தின் (Teachers' Association) ஆண்டு விழா எம் பாடசாலைத் தலைமை ஆசிரியர் சங். **A. லூர்துஸ்வாமி,** B.A., L.T. அவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் சிற்றுண்டிக்குப் பிறகு தலைவர் அவர்கள் சங்கத்தின் வேலையைப் புகழ்ந்து, இன்னும் செய்யவேண்டிய முன்னேற்ற வேலைகளைக் குறித்துத் தக்க ஆலோசனைகள் புரிந்தனர்.

[18-3-42 to 21-3-42] **T. S. L. C. பரீட்சை.** இந்த நான்கு தினங்களில் ஷை ஸர்க்கார் பரீட்சை நம் பாடசாலை ஸெண்டரில் நடைபெற்றது. முந்திய வருஷங்களைப்போல் இவ்வருஷத்திலும் ஸர்க்கார் போதனாமுறைப் பாடசாலை மாணவர்களும், இருங்களூர் போதனா முறைப் பாடசாலை மாணவர்களும் சேர்ந்து 350 பேருக்குமேல் நம் பாடசாலையில் பரீட்சை எழுதினர்.

நம் பாடசாலைத் தலைமையாசிரியரவர்கள் வழக்கம்போல் Chief-Superintend ஆக இருந்து ஷை பரீட்சையை நேர்மையுடன் நடத்தி வைத்தனர்.

[23-3-42 to 26-3-42] பாடசாலை முதல் வருஷ முடிவுப் பரீட்சை. ஸெக்கண்டரி-கிரேடு, எலிமெண்டரி-கிரேடு மாணவர்கள் முதல் வருஷ முடிவுப் பரீட்சை நடைபெற்றது. 27-3-42 முதல் 9-6-42 வரை கோடை விடுமுறை விடப்பட்டது.

---

## திருச்சி திருக்குடும்ப போதனுமுறை பாடசாலை பழைய மாணவர் சங்க ஆண்டுவிழா

மேற்படி விழா 7-3-'42 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திருச்சி ஜில்லா உதவி ஸ்கௌட் கமிஷனர் ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார், பி. ஏ., பி. எல். அவர்களது தலைமையின்கீழ் எம் பாடசாலை சபாமண்டபத்தில் வெகு குதூகலத்துடன் நடைபெறலாயிற்று.

மேற்படி வைபவம் கடவுள் வணக்கத்தோடு தொடங்க, எம் பாடசாலை தலைமையாசிரியரும், எம் சங்கத்தலைவரும் ஆகிய சங்கைக்குரிய ஏ. லூர்துசாமி பி. ஏ., எல். டி. அவர்கள் அனைவரையும் வரவேற்று, சபாநாயகரை மேற்படி விழாவை நடத்தி வைக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

சபாநாயகருக்கு மாலை சூட்டிய பின்னர், தேனீர் விருந்து அவ்வமையம் குழுமியிருந்த சுமார் 300 பேருக்கும் அளிக்கப்பட்டது.

பழைய மாணவர்களும், புதிய மாணவர்களும் பிரிவு உபசாரச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியபின், ஆசிரியர்களின் சார்பாக, ஆசிரியர் ஸ்ரீ கணபதி அய்யரவர்கள் பாடசாலையைவிட்டு வெளிச்செல்லும் மாணவர்கட்கு ஆசி கூறினர். பின்னர், நம் பழைய மாணவர் சங்கத்தின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்து வருபவரும் நம் பழைய மாணவர் சங்கத்தின் பொக்கிஷதாரும் ஆகிய திரு. Y. சூசை மாணிக்கம் அவர்கள், தாய்ப்பாடசாலைமட்டில் பழைய மாணவர்கள் அனைவரும் அன்பு பாலித்து வருவதுடன் நம் போதனுவிஷயப் பூங்கோத்தின் சந்தாதார்களாகவே எப்போதும் இருந்துவருவதே சாலச் சிறந்த பணியாகும் என்றும் இன்னும் புதுச் சந்தாதாரர்களைச் சேர்த்தும் விஷய தானங்கள் புரிந்தும் வரவேண்டுமென வெகு திறமையாகப் பேசிமுடித்தனர்.

கடைசியாக சங்கக் காரியதரிசி ஸ்ரீ ஆர். பிச்சைப்பிள்ளை அவர்களால் வருடாந்தர ரிப்போர்ட்டு வாசிக்கப்பட்டது.

எம் பாடசாலைக் கண்காட்சியில் திறமையான வேலைப் பொருட்களை சமர்ப்பித்தவர்களுக்கும், எம் பாடசாலை சாரணர்களின் திறமைகளை மெச்சியும், யோக்யதாபத்திரங்கள் தலைவர் அவர்களால் அளிக்கப்பட்டன.

தலைவரவர்கள் பலத்த கரகோஷங்களுக்கிடையில் தமது அரியதோர் சொற்பொழிவை நிகழ்த்தினர். அப்போது ஆசிரியர்கள் தங்

களுக்குள் எழும் அவசியமான ப்ரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளவும், போதனுமுறையில் தோன்றிவரும் புது புது அம்சங்களில் தேர்ச்சி பெறவும், இத்தகைய கூட்டங்கள் அவசியம் என்றும் அதற்கேற்ப இப்பாடசாலையினின்று வெளியாகும் **போதனுவிஷயப் பூங்கோத்து** என்னும் மாதாந்தரப் பத்திரிகையை ஆசிரியரனைவரும் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்றும் வற்புறுத்திப் பேசி முடித்தனர்.

பின்னர் எம் சங்கத் தலைவர் சங்கைக்குரிய ஏ. லூர்துசாமி பி. ஏ., எல். டி. அவர்கள் வெளிப்போகும் மாணவர்களுக்கு புத்திமதிகளைச் சொல்லி, ஆசி கூறி, சபாநாயகருக்குச் சங்கத்தின் சார்பாகத் தமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டனர்.

இறுதியாய், சங்கக் காரியதரிசியவர்கள் அனைவருக்கும் வந்தனோபசாரங் கூற, சங்க ஆண்டுவிழா முடிவெய்தியது.

## பழைய மாணவர் சங்க காரியக்கூட்டம்

14-3-42 சனிக்கிழமையன்று எம் பாடசாலையில் நிகழ்ந்த காரியக்கூட்டத்தில் நம் பழைய மாணவர்களில் பலர் வெள்ளிப் பதக்கப் பரிசுகள் அளிப்பதாக வாக்குறுதி செய்தனர். விவரம் பின்வருமாறு :—

1. A. மனுவேல் (S. 2) என்பவர் பாடசாலை ஞானோபதேசப் பரீட்சையில் முதல் தரமாக தேர்ச்சி பெறும் செக்கண்டரி மாணவர்க்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், 2. இடிந்த கரையைச் சேர்ந்த சில பழைய மாணவர் (A. M. Angelus Fernando & Co.,) பாடசாலை ஞானோபதேசப் பரீட்சையில் முதல் தரமாக தேர்ச்சி பெறும் எலிமெண்டரி கிரேடு மாணவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், 3. C. கபிரியேல் தைரியநாதன் (E. 2) என்பவர் பாடசாலை ஞானோபதேசப் பரீட்சையில் இரண்டாவதாக தேர்ச்சி பெறும் எலிமெண்டரி கிரேடு மாணவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், 4. S. A. ரெங்கநாதன் (S. 2) என்பவர் சர்க்கார் பரீட்சையில் இரண்டாவதாகத் தேர்ச்சி பெறும் செக்கண்டரி மாணவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், 5. C. தைரியநாதன் (E. 2) என்பவர் சர்க்கார் பரீட்சையில் இரண்டாவதாகத் தேர்ச்சி பெறும் எலிமெண்டரி கிரேடு மாணவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், 6. A. ராஜா மிக்கேல் (E. 2) என்பவர் பாடசாலை சங்கீத பாடத்தில் முதல் தரமாக தேர்ச்சி பெறும் எலிமெண்டரி கிரேடு மாணவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், 7. D. இஞ்ஞாசிமுத்து (E. 2) என்பவர் பாடசாலைப் போட்டிப் பந்தய விளையாட்டுகளில் முதல் தரமாக விளங்குபவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், 8. G. பட்டாபி ராமன் (E. 2) என்பவர் நம்

பாடசாலை விழா நாடகத்தில் திறமையுடன் முதல் தரமாக நடிப்பவர்க்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், 9. C. ஜார்ஜ் ஸிட்னி (S. 2) என்பவர், நம் பாடசாலையில் பயின்று வரும் ஆசிரிய மாணவர்களுள் (both grades) முதல் தரமாக தமிழில் சொற்பொழிவு (ex-tempore speech) நிகழ்த்துபவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், 10. R. சூசைனூர்து (E. 2) என்பவர் பாடசாலை வைபவ விளையாட்டுகளுள் கோலூன்றித் தாண்டுதலில் (Pole Vault) முதல் தரமாக விளங்குபவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், 11. S. ஆசீர்வாதம் (E. 2) என்பவர் உள் பிள்ளைகளுள் (Boarders) நன்னடத்தையில் சிறந்து விளங்கும் மாணவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், 12. L. G. சீனிவாசன் (S. 2) என்பவர் வெளி மாணவர்களுள் (Day Scholars) நன்னடத்தையில் சிறந்து விளங்கும் மாணவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், இவ்வருஷம் பாடசாலை தின வைபவக் கொண்டாட்டத்தின்போது பரிசளிப்பதாக வாக்குக் கொடுத்துள்ளனர். இன்னும், 13. D. மரியஜோசப் (S. 2) என்பவர், பழைய மாணவர் வருடாந்தரத் தினத்தன்று நடைபெறவிருக்கும் வாய்ப்பாட்டு போட்டியில் (Open to old and new boys) முதல்தரமாக விளங்குபவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், 14. K. ராஜாராம் (S. 2) என்பவர் நம் பாடசாலை சாரணர்களுக்குள் திறமை வாய்ந்த சாரணருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், 15. P. சூசைமாணிக்கம் (E. 2) என்பவர் அடுத்த பழைய மாணவர் வருடாந்தர வைபவத்திற்குள், மிக அதிகமான பூங்கொத்து சந்தாதார்களைச் சேர்ப்பவருக்கு ஒரு வெள்ளிப்பதக்கமும், வருகிற வருஷம் கொண்டாடப்படும் பழைய மாணவர் வைபவ தினத்தன்று பரிசளிப்பதாக வாக்குக்கொடுத்துள்ளனர்.

தாய்ப் பாடசாலை மட்டில் நம் பழைய மாணவர்களிடையேயுள்ள அபிமானமானது நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு போகின்றனதென்பதில் ஐயமில்லை. இவ்வருஷம் வெள்ளிப் பதக்கப் பரிசுகளளிப்பதாக வாக்குக்கொடுத்த மேற்கூறிய நண்பர்களுக்கு நம் பழைய மாணவர் சங்கத்தின் சார்பாக எனது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

R. Pitchai,

காரியதரிசி,

திருச்சி, திருக்குடும்ப போதனுமுறைப் பாடசாலை,

பழைய மாணவர் சங்கம்.

## பாலர் ஸங்கீதம்

(A. Gnanadickam, *Music Teacher.*)

### காலையில் தன் பிள்ளையைத் துயிலினின்று எழுப்புந் தாய்

(4, 5, வகுப்புகள்)

நோட் மெட் (ஆதியாம்பரம்) ரூபகம்.

**கண்ணிகள்.**

1. காரிருள் போகக்க திரோன் உதிக்குது
காகம் கண்விழித்துக் கரையுது
சீர் துயில் விட்டெழு செல்வமே! இன்னமும்
செய்யாதே நித்திரை சோம்பல்காணும்

2. சொல்லரிய வெள்ளை சுத்தப்பனிநீரும்
தோணும் அழகைப்பார் பசும்புல்மேல்
நல்லதுயில்செய்யும் நற்செல்வா இத்தனை
நாழிகை தூங்காதே சோம்பல்காணும்

3. காலைக் கடன்கழி கங்கைநீரில்குளி
கடவுளைத்துதி காவில் விதி
வேலை மனதுதெ ளிவுறவுந் தோணும்
வேண்டாம்வீண் நித்திரை சோம்பல்காணும்

4. சூரியன் தண்கதிர் கைகளை நீட்டிமண்
தூங்கும் உயிர்களைத் தூண்டுதுபார்
ஏரமர் பஞ்சணை விட்டெழு என்செல்வா
இன்னமும் தூக்கமா? சோம்பல்காணும்

5. சோலைமலர்கனி வாசம்வீசவன்ச்
சுந்திரப்பட்சிகள் பாட கல்விச்
சாலை படித்தாட நித்திரை விட்டெழு
சற்குண! அழாதே சோம்பல்காணும்.

## ஸ்வரம்

ஸாஸா | ஸா–மாமாமா || ரீமா | மா–பாபாபா || காபா
காரி | ருள்–போகக்க || திரோன் | உ–திக்குது || காகம்

| ஸ்தா–தாபா || மாகா | பா–மா ; ; ||
| கண்–விழித்துக் || கரை | யு து ; ; ||

தாதா | தா–ஸ்ாஸ்ாஸ்ா || காமா | பா– தாதாதா || ரீகா
சீர்து | யில்–விட்டெழு || செல்வ | மே–இன்னமும் || செய்யா

மா–பாபாபா || மாகா | பா–ஸா ; ; ||
தே–நித்திரை || சோம்பல் | கா–ணும் ; ; ||

குறிப்பு :—இவ்விதமே மற்ற அடிகளையும் பாடவேண்டும். 4-5 வகுப்புகள் தவிர 6, 7, 8 வகுப்பு பாலிகைகளுக்கும் கற்பிக்க ஏதுவானது.

உபாத்திமார்கள் அனுபவத்தைத் தழுவி கோலடிப்பதற்கும் கையாளலாம்.

---

(உபாத்தியாயர் புலியும், மானும் என்ற கதையைச் சொல்லி அப்பியாசம் கொடுத்தார்.)

**உபாத்தியாயர் :**—தினசரிப் பத்திரிகையிலுள்ளதைப் பார்த்து, அதில் "அந்தமானுக்கு ஆபத்தில்லை" என்று வாசித் [illegible]

**ஜான் :**—சார்! ஆபத்தென்று சொன்னீர்களே.

---

## எலிமெண்டரி பாடசாலைகளுக்கு ஏற்ற
## சங்கீத பாட புத்தகங்கள்

1. பால சங்கீத வாசகம் முதல் 3 வகுப்பு மாணவர்களுக்கு 0—4—6
2. பால சங்கீத வாசகம் ஆசிரியர்களுக்கு ... 0—6—6
3. கர்னாடக சங்கீத போதினி (முதல்பாகம்) ஆசிரியர்களுக்கு 0—6—0
4. கர்னாடக சங்கீத போதினி (2-ம் பாகம்)
   1 முதல் 5 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0
5. கர்னாடக சங்கீத போதினி (3-ம் பாகம்)
   6 முதல் 8 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0

விலாசம் : **A. GNANADICKAM,**
*South Indian Music School, St. Thomas Church Rd.,*
*OOTACAMUND.*

---

# போதனா விஷயப் பூங்கொத்து

## காரியாலயம்

பூங்கொத்து வருஷ இதழ்களை ஒன்றாகச் சேர்த்து உபாத்திமார்களுக்கும், பாடசாலைகளுக்கும் எப்பொழுதும் உதவும்வண்ணம் புத்தகமாக பைண்டிங் செய்து அநேகர் வைத்துக்கொள்ளுகிறார்கள். அன்னவர்கள் பழைய தனி சஞ்சிகைகள் தேவையானபோது, பிரதி ஒன்றுக்கு ஒன்றரை அணா வீதம் அனுப்பவேண்டும். வேண்டிய பத்திரிகைகளின் மலர் நம்பரைத் தெரிவித்தால் அவைகளை அனுப்புவோம்.

பத்திராதிபர்.

Reg. No. M. 1534.

# OUR EMPLOYMENT BUREAU

1. Wanted 3 Secondary Grade trained teachers immediately. Apply the Manager, Sri Krishna Vilas H. E. School, Kalangani, Puduchatram P. O., Salem Dt.

2. Wanted 2 Higher Ely. Grade trained teachers immediately on Rs. 13 or Rs. 14 each according to their ability. Apply the Parish Priest and Manager, R. C. Schools, Ramnad.

3. Wanted a Higher Ele. Grade trained teacher on Rs. 14 and rent-free house. Apply the Manager, R. C. Schools, Sindalacherry P. O., (Via) Thavaram, Madura Dt.

4. Wanted a Higher Ele. Grade trained teacher. Apply Rev. Father V. Allard S.J., St. Mary's, Post Box 56, Madura.

5. Wanted a Secondary Grade trained teacher as Headmaster of an elementary School on Rs. 18-1 (bien)-25. Apply the Principal, St. Joseph's High School, Chingleput.

6. Wanted two Higher Elementary Grade trained teachers. Apply Rev. Fr. M. S. Arulanandam S.J., Sithumunadappu, Kariyapatty P.O., Ramnad Dt.

7. Wanted a Secondary Grade trained teacher on Rs. 22 as Headmaster of an Elementary School. Apply Rev. Fr. Rigothier, R. C. Church, Vell-andi-valasi, Idapaddy P.O., Salem Dt.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly